# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.359/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.3.சரவணன்** |
| **Father's Name** | : **ஜெயராஜ்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**24.11.2021**

**மு.வி:**

நான் தற்போது கோவை மாவட்டம் கே.ஜி.சாவடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 14.06.2013 ஆம் தேதி 17 மணிக்கு எழுமலை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது எழுமலை கிருஷ்ணன் கோவில் தெருவை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மனைவி சுமதி என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று காவல் நிலைய குற்ற எண்.111-13 இதச பிரிவுகள் 406, 420, 294(பி), 506(1) படி வழக்கு பதிவுசெய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2.** முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இந்நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்பை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி:

சம்பவம் நடந்தது 20.08.2012 ஆம் தேதி என்றும் புகார் 14.06.2013 ஆம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டதற்கு சிறப்பு காரணங்கள் எதுவும் புகார்தாரர் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரில் இருப்பு என சென்னை முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் அவர் அணிந்திருந்த நகையை 19.08.2012 ஆம் தேதி ஆடம்பாக்கம் கூட்டுறவு வங்கியில் அடகு வைத்து 1வது எதிரி வசம்

பணம் கொடுத்ததாக சொன்ன வகையில் அடகு வைத்த ரசீதை புகாரில் இணைத்து கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 20.08.2012 ஆம் தேதி எழுமலையில் வைத்து 1வது எதிரி பரமராஜ்க்கு கைமாத்தாக ரூபாய் 1 லட்சம் கொடுத்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ள வகையில் அது சம்மந்தமாக ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதா என்று புகார்தாரர் தரப்பில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டுள்ள வங்கி பண பரிமாற்றத்திற்கு ஆதரவாக வங்கி பாஸ்புத்தகம் மற்றும் வங்கி பண பரிவர்த்தனை ஆவணங்களை புகார் கொடுக்கும்போது இணைத்து புகார்தாரர் கொடுத்தாரா என்றால் இல்லை. வாதி பொய்யாக கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் நான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.